வகுப்பு : 12 ஒரு மதிப்பெண் தேர்வு – 5 மதிப்பெண்கள்: 40

தமிழ் காலம் : 45 நிமிடங்கள்

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 34 x 1 = 34

1. பொருத்துக:
   - அ) பண்டைய காலத்துப் பள்ளிக் கூட்டங்கள் - 1. சி.மணி
   - ஆ) இதில் வெற்றி பெற - 2. ஔவையார்
   - இ) இடையீடு - 3. உ.வே.சா
   - ஈ) புறநானூறு - 4.சுரதா

   அ) 4,3,2,1 ஆ) 3,4,2,1 இ) 3,4,1,2 ஈ) 2,4,1,3
2. அக்ஷராப்பியாசம் என்பது ________
   அ) கல்வித் தொடக்கம் ஆ) கல்விப்பயிற்சி இ) பெருக்கல் வாய்பாடு ஈ) எழுத்துப்பயிற்சி
3. "காவினெம் கலனே, சுருக்கினெம் கலப்பை" - இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள் _____
   அ) போர்க் கருவி ஆ) தச்சுக் கருவி இ) இசைக் கருவி ஈ) வேளாண் கருவி
4. சுரதா நடத்திய கவிதை இதழ்
   அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்
5. "விண்வேறு, விண்வெளியில் இயங்குகின்ற பெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு" இத்தொடர் தரும் முழுமையான பொருள்.
   அ) விண்ணும் வெண்மதியும் வேறு வேறு ஆ) விண்வெளியும் செங்கதிரும் வேறு வேறு
   இ) வெண்மதியும் முகிலும் வேறு வேறு ஈ) விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர். முகில் அனைத்தும் வேறு வேறு
6. ஜான் மில்டனின் சுவர்க்க நீக்கத்தைத் தமிழில் மொழி பெயர்த்தவர் ________
   அ) ப.சுப்பிரமணியனார் ஆ) சோமசுந்தரனார் இ) மா.இராசமாணிக்கனார் ஈ) வேங்கடசாமி
7. வரலாற்றாய்வாளரும் தமிழறிஞருமான டாக்டர் மா.இராசமாணிக்கனார் ________ என்பாரிடம் படித்தார்
   அ) மௌனகுரு ஆ) குருசாமி வாத்தியார் இ) கணபதியார் ஈ) மகிபாலன்பட்டி நடேசனார்
8. மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்த வ.சுப.மாணிக்கம் ________ திண்ணைப் பள்ளிக்கூடத்தில் பயின்றார்.
   அ) எட்டயபுரம் ஆ) மகிபாலன் பட்டி நடேசனார் இ) கணபதியார் ஈ) மௌனகுரு
9. பொருத்துக.
   - அ) வித்தியாரம்பம் - 1. பெருக்கல் வாய்ப்பாடு
   - ஆ) வித்தியாப்பியாசம் - 2. கல்வித்தொடக்கம்
   - இ) குழிமாற்று - 3. தாழை மடல்
   - ஈ) சீதாள பத்திரம் - 4. கல்விப்பயிற்சி

   அ) 2,4,3,1 ஆ) 4,3,1,2 இ) 2,4,1,3 ஈ) 3,4,2,1
10. "மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும் மிஞ்சப் புகட்ட மிக வளர்ந்தாய் இவ்வடிகள் இடம் பெற்ற நூல் ________
    அ) தமிழ்விடு தூது ஆ) தொல்காப்பியம் இ) நன்னூல் ஈ) சீவகசிந்தாமணி
11. 'நாராசம்' என்பது ________
    அ) செப்புத் தகட்டால் சட்டஞ் செய்து கோர்த்தல்
    ஆ) செப்புச் சட்டங்களின் மேல் வர்ண மையினால் ஓவியம் வரைதல்
    இ) ஓலையை வாரி ஒழுங்காக நறுக்கித் துளையிட்டுக் கயிறு கோர்த்தல்.
    ஈ) இரட்டைத் துளையுள்ள ஏடுகளில் துளையில் செப்புக் கம்பி அல்லது மூங்கில் குச்சியைச் செருகிக்கட்டுதல்
12. நவத்வீபம் என்பது ________ அ) பெருக்கல் வாய்பாடு ஆ) வங்காளத்தில் உள்ள ஓர் ஊர்
    இ) தாழை மடல் ஈ) பின்ன எண்ணின் கீழ்த்தொகை.
13. 'புலமைப் பெருங்கடல்' என்று பாராட்டப்பட்டவர்
    அ) உ.வே.சா ஆ) வ.உ.சி இ) வ.சுப.மா ஈ) திரு.வி.க.
14. ஓதற்பிரிவுக்கு உரிய கால எல்லை ________
    அ) 1 ஆண்டு ஆ) 3 ஆண்டுகள் இ) 2 ஆண்டுகள் ஈ) எதுவுமில்லை
15. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
    அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச்சாறு இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி
16. 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?
    அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை
17. 'இதில் வெற்றி பெற' என்ற கவிதை இடம் பெற்ற கவிதைத் தொகுப்பு ________
    அ) விண்மீன் ஆ) தேன்மழை இ) ஊர்வலம் ஈ) துறைமுகம்

18. இராசகோபாலன் என்பவர் __________
அ) முடியரசன் ஆ) சுரதா இ) கண்ணதாசன் ஈ) இராஜாஜி
19. 'விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற: வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு; - இவ்வடியில் இடம் பெற்றுள்ள தொடை நயம் ________
அ) சீர்மோனை ஆ) சீர் இயைபு இ) சீர்எதுகை ஈ) இவை அனைத்தும்.
20. 'நடை' என்னும் சிற்றிதழை நடத்தியவர் __________
அ) கி.ராஜநாராயணன் ஆ) சி.மணி இ) சி.சு.செல்லப்பா ஈ) சுரதா
21. பொருத்துக.

| சொல் | பொருள் |
|---|---|
| அ) வித்தி | - 1. வலிமை |
| ஆ) உரன் | - 2. யாழ் |
| இ) கலன் | - 3. விதை |
| ஈ) மழு | - 4. கோடரி |

அ) 2,1,3,4 ஆ) 3,1,4,2 இ) 3,1,2,4 ஈ) 4,3,2,1
22. 'வள்ளியோர் செவி முதல் வயங்குமொழி வித்தித் தாம்' - இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லுக்கான பொருள்
அ) பண்புத்தொகை ஆ)எண்ணும்மை இ) வியங்கோள்வினைமுற்று ஈ) வினைத்தொகை
23. பொருத்துக.

| | |
|---|---|
| அ) மாச்சீர் | - 1. கருவிளம், கூவிளம் |
| ஆ) காய்ச்சீர் | - 2. நாள், மலர் |
| இ) விளச்சீர் | - 3. தேமாங்காய், புளிமாங்காய் |
| ஈ) ஓரசைச்சீர் | - 4. தேமா, புளிமா |

அ) 1,2,4,3 ஆ) 4,3,1,2 இ) 2,3,1,4 ஈ) 3,4,2,1
24. அதியமானிடம் நட்புப் பாராட்டியவர்: அவருக்காத் தூது சென்றவர் ________
அ) பரணர் ஆ) அம்மூவனார் இ) கபிலர் ஈ) ஔவையார்.
25. முதல் 'பன்னாட்டுச் சாலை அமைப்பு' மாநாடு நடந்த இடம் ________
அ) டோக்கியோ ஆ) பாரிஸ் இ) வாசிங்டன் ஈ) இந்தியா
26. சாலைப்போக்குவரத்து உதவிக்கு ________ தொலைப்பேசி எண்ணை தொடர்பு கொள்ள வேண்டும்.
அ) 103 ஆ) 108 இ) 1019 ஈ) 100
27. உலகிலேயே அதிக சாலைப் போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இரண்டாவது பெரிய நாடு ______
அ) சீனா ஆ) இந்தியா இ) அமெரிக்கா ஈ) ஆப்பிரிக்கா
28. மது குடித்துவிட்டு வாகனம் ஓட்டினால், தண்டனைத்தொகையாக ரூ. __________ கட்ட நேரும்.
அ) 2,000 ஆ) 1,000 இ) 10,000 ஈ) 5,000
29. பதின்மூன்றடி முதல் அதற்கும் மேற்பட்ட அடிகள் வரை கொண்டது. __________
அ) குறள் வெண்பா ஆ) ப∴றொடை வெண்பா இ) சிந்தியல் வெண்பா ஈ) கலிவெண்பா
30. மாமுன் நிரையும், விளம் முன் நேரும் வருவது _________
அ) இயற்சீர் வெண்டளை ஆ) வெண்சீர் வெண்டளை இ) ஒன்றிய வஞ்சித்தளை ஈ) கலித்தளை
31. 'வன்பா' என அழைக்கப்பெறும் பா _________
அ) கலிப்பா ஆ) ஆசிரியப்பா இ) வஞ்சிப்பா ஈ) வெண்பா
32. ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளுள் ஒன்றைக் கொண்டு முடியும் பா ______
அ) வஞ்சிபா ஆ) கலிப்பா இ) வெண்பா ஈ) ஆசிரியப்பா
33. நிரைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும். - இதில் ஈற்றுச்சீர் வாய்ப்பாடு _____
அ) நாள் ஆ) மலர் இ) காசு ஈ) பிறப்பு
34. வெண்பாக்கள் _________ வகைப்படும். அ) ஏழு ஆ) எட்டு இ) ஐந்து ஈ) நான்கு

**II மொழிப்பயிற்சி** 3 x 2 = 6

35. கலைச் சொல்லாக்கம் தருக.
அ) Visa ஆ) Departure
36. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
அ) கோவில் ஆ) வெங்காயம்
37. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
அ) இன்னிக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்.
ஆ) மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.